# அன்பு தோழர் VKP மறைந்தார்




விருது நகர் மாவட்டத்தில் தனது பணியை துவங்கி மதுரையில் கணக்கு அதிகாரியாக பணி ஓய்வு பெற்ற தோழர் V.K.பரமசிவம் அவர்கள் 16.05.2017 அன்று அதிகாலை காலமாகிவிட்டார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழக K.G.போஸ் இயக்க முன்னணி தலைவர்களாக பல ஆண்டு காலம் சிறப்பாக பணியாற்றி பதவி உயர்வு பெற்று AIBSNLEA சங்கத்தின் மாநில சங்க நிர்வாகியாக, அகில இந்திய ஆலோசராகவும் மிக சிறப்பாக பணியாற்றியவர் தோழர் V.K.பரமசிவம். அவர் 3ஆம் பிரிவு ஊழியராக பணியாற்றியபோதும், அதிகாரியாக பணியாற்றியபோதும் எப்போதும் தொழிற்சங்க இயக்கத்தில் முன்னணி பாத்திரம் வகித்தவர். அவரது மறைவிற்கு தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் தனது அஞ்சலியை உரித்தாக்கிக் கொள்கிறது.

அவரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்..